# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


ஊடகச் செய்தி எண்.2/2021

நாள் : 02.02.2021

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு மற்றும்
பொதுச் செயலாளர் ஆ.செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிடும்

**ஊடகச் செய்தி**

**அரசு ஊழியர்-ஆசிரியர்களின் மீது புனையப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளையும் குற்ற குறிப்பாணைகளையும், ரதுத செய்து தமிழக அரசு அறிவித்ததை வரவேற்கிறோம். ஆனால் அது மட்டும் போதாது, நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஜீவாதார உரிமைகள் மீது தமிழக முதல்வரும், துறை அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்னைகளை முடிவுக்கு கொண்டுவர அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை அழைத்துப் பேச வேண்டும்.**

**தமிழக அரசுக்கு**
**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோரிக்கை!**

மத்திய அரசு, ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று தனது ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் வழங்கிய பின்னரும் தமிழக அரசு ஊதியக்குழுவை அமைத்து உடனடியாக ஊதியமாற்றம் ஏற்படுத்திடாமல் காலம் தாழ்த்திய நிலையில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஊதிய மாற்ற பரிந்துரைகளை அமல் படுத்த போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் அரசு ஊழியர்களுக்கு ஊதிய மாற்றம் ஏற்படுத்தாமல் அரசு ஊழியர்கள் போரட்டக்களம் காண வேண்டிய நிலையை தமிழக அரசு ஏற்படுத்தியது. இந்தப்போராட்டம் உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு சென்ற பின் மதுரை உயர்நீதிமன்றம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையான ஊதிய உயர்வை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அரசை கண்டிப்புடன் நிர்ப்பந்தித்ததன் பேரில் ஊதிய மாற்றமானது 21 மாத கால இடைவெளிக்குப் பின்னர் வழங்கப்பட்டது. மேலும் அந்த 21 மாத கால ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசால் மறுக்கப்பட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை குறித்தும் மேலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் முக்கிய கோரிக்கைகளான புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்திட வேண்டும் ஊதிய மாற்றத்தின் போது ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகள் களையப்பட வேண்டும் சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முறையான ஊதியம் வழங்க வேண்டும், மற்றும் பணியாளர் பகுப்பாய்வுக் குழுவினை அமைத்து வெளியிடப்பட்ட அரசாணையை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை பலமுறை முறையீடுகள் மூலமாகவும், நேரடியாகவும் முறையிட எத்தனித்தும் அவை அனைத்தும் பலனில்லாமல் போனதால் அரசாங்கம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை நேரடியாக அழைத்துச்பேசி தீர்வு காண வேண்டும் எனறு கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் அரசு ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களையோ, போராடும் சங்க நிர்வாகிகளையோ அழைத்துப் பேசாமல் அடக்குமுறைகளை ஏவி விட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பலபேரை கைது, துறைவாரி விசாரணை, பணியிட மாற்றம் போன்ற நடவடிக்கை வாயிலாக போராட்டத்தை சிதைக்கப்பார்த்தது. போராட்டத்தின் உச்சமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மக்கள் மற்றும் மாணவர்கள் நலன் கருதி போராட்டத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டுமென கேட்டுக் கொண்டதன் பேரில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை அழைத்துப் பேசி தீர்வு காண்பார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் 29.01.2019ஆம் தேதியோடு போராட்டத்தை முடித்துக் கொண்டு அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் பணிக்கு திரும்பினோம். நாங்கள் பணிக்குத் திரும்பும் முன் அரசிடம் போராட்டத்தின் போது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது போடப்பட்ட வழக்குகள், துறைவாரி நடவடிக்கைகள், குற்றக் குறிப்பாணைகள், பணிமாறுதல் உத்தரவுகள் போன்றவற்றை திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து 30.01.2019ஆம் தேதி பணிக்குத் திரும்பினோம்.

ஆனால் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பணிக்குத் திரும்பிய பின்னர் எங்களின் எந்தக் கோரிக்கையையும் அழைத்துப்பேசி தீர்க்க முன் வராததோடு மட்டுமல்ல போராட்ட காலத்தில் எடுக்கப்பட்ட துறைவாரி நடவடிக்கைகள் குற்ற குறிப்பாணை நடவடிக்கைகள் பணியிட மாற்ற நடிவடிக்கைகள் போன்றவற்றைக்கூட திரும்பப் பெற முன்வரவில்லை. அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் பலமுறை அரசாங்கத்திடம் கோரிக்கைள் வைத்தும் அழைத்துப்பேச வலியுறுத்தியும் அரசாங்கம் அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் ஜாக்டோ ஜியோ பிரதிநிதிகளை அழைத்துப் பேசாததோடு அந்த நடவடிக்கைகளை, விசாரணைகளை மேலும் தீவிரப்படுத்தியது.

பலமுறை மாண்புமிகு முதல்வரையோ, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களையோ தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் சந்திக்க முயற்சித்து அது தோல்வியில் முடிந்திட்ட நிலையில் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கும் ஊழியர்களின் கோரிக்கைகளை உரிமைகளைக் காப்பதற்கும் மறியல் செய்து சிறை நிரப்பும் போராட்டத்தைதவிர வேறு வழியின்றி கையிலெடுக்க வேண்டிய அவசியத்தை தமிழக அரசு ஏற்படுத்திவிட்டது.

இன்று அதாவது பிப்ரவரி 2 முதல் சிறை நிரப்பும் போராட்டத்தை அறிவித்த நிலையில் தமிழக முதல்வர் 2019ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொள்ளாத எவ்வித குற்றக் குறிப்பாணைகளுக்கும் ஆளாகாத லெட்டர்பேடு சங்கங்களின் நிர்வாகிகள் சிலர் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்ததன் பேரில் போராட்ட காலத்தில் தொடரப்பட்ட அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகளையும் குற்றவியல் நடவடிக்கைகளையும் கைவிடுவதாக அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பலமுறை ஜனநாயகப்பூர்வமான போராட்டங்கள் மற்றும் பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்தும் தமிழக முதல்வரையும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரையும் பார்க்க மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோற்றுப்போன நிலையில்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

சிறைசென்றாவது அரசின் கவனத்தை ஈர்த்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மற்றும் துறை அமைச்சர்களை கேட்க வைத்துவிட வேண்டும். மேலும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான உரிமைகளை மீட்டிட வேண்டும் என்ற தீர்மானமான செயலில் இறங்கியுள்ள நிலையில் மறப்போம் மன்னிப்போம் என்ற நிலையில் போராட்ட காலத்தில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது ஏவப்பட்ட துறை மற்றும் குற்ற நடவடிக்கைகளை மட்டும் தமிழக முதல்வர் திரும்பப் பெற்றுள்ளதை அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலிக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர்வதற்கான வழிவகைகளை கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை முடிவுகளைப் பற்றி எதுவும் சொல்லாமல், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன் வைத்துள்ள முக்கிய கோரிக்கைகள் குறித்து எதுவும் விவாதிக்காமல் அது குறித்து அரசின் நிலைப்பாட்டை ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை அழைத்துப் பேசி தீர்வு காணாமல் போராட்ட காலதத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீதான குற்றக் குறிப்பாணைகளை மட்டும் ரத்து செய்வதாக அறிவித்திருப்பது இரண்டு ஆண்டுகள் காத்திருந்து அரசின் கவனத்தை ஈர்க்க அறிவிக்கப்பட்டுள்ள எங்கள் தொடர்ச்சியான போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாகவே பார்க்கிறோம். அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனுக்காக எந்தப் போராட்டத்திலும் ஈடுபடாத சில சங்க நிர்வாகிகள் கொடுத்த கோரிக்கைகளை ஏற்று ரத்து செய்வதாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது ஜாக்டோ ஜியோ போராட்டக்குழுவின் முன்னெடுத்துள்ள போராட்டத்தின் முக்கியத்துவத்தை அரசுக்கு உணர்த்தியுள்ளது ஒரு நல்ல ஆரம்பமே.ஷ

ஆனாலும், இந்த ஒரு அறிவிப்பினைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வரும், மாண்புமிகு துறை அமைச்சர்களும் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளுடனும் மற்றும் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்தி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமான நிலுவை கோரிக்கைகளை கேட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உறுதி பூண்டுள்ள சிறை நிரப்பும் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கும்.

மறப்போம் மன்னிப்போம் என்ற உயரிய கருத்தை மனதில் கொண்டு அரசு ஊழியர்கள் மீதான ஒழுங்கு மற்றும் குற்ற நடவடிக்கைகளை கைவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதே மறப்போம் மன்னிப்போம் என்ற உயரிய கோட்பாட்டை மனதில் கொண்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நிலுவை கோரிக்கைகளான 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை, புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்தல், ஊதிய மாற்றத்தின் போது ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகள் களையப்படுதல், சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முறையான ஊதியம் வழங்க வேண்டும், முடக்கப்பட்ட அகவிலைப்படி, சரண்டர் போன்ற கோரிக்கைகளின் பேரில் நேரடி பேச்சுவார்த்தை மூலம் உரிய தீர்வைக் காண முன் வர வேண்டும் என மாண்புமிகு முதல்வரோ அல்லது மாண்புமிகு துறை அமைச்சர்களோ எங்கள் கோரிக்கைகளின் பேரில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாத வரையில் எங்கள் சிறை நிரப்பும் போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

எனவே உடனடியாக அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை மாண்புமிகு தமிழக முதல்வரும் மற்றும் அமைச்சர்களும் நேரடி பேச்சுவார்த்தைக்கு அழைத்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகளின் பேரில் நல்ல தீர்வினை காணக் கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| **(மு.அன்பரசு)** | **(ஆ.செல்வம்)** |
| மாநிலத் தலைவர் | பொதுச் செயலாளர் |